

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகிற 11, 12 ஆகிய இரண்டு தினங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் இசை , மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி , சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப், செந்தில், கிருபாகரன் , பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன்,நாகராசன், கோதண்டன், கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர்கள் அஸ்லாம் , வேல்மணி, மற்றும் ஒன்றிய செயலாளர்கள் பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர்.



திருப்பூர் கிழக்கு மற்றும் தெற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் தாராபுரம் சாலையில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயம் "தளபதி அரங்கில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர், தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி நினைவிடத்தில் மலர் அஞ்சலி:

# இமானுவேல் சேகரனாருக்கு 2 மாதங்களில் சிலை - மணிமண்டபம் திறப்பு!

## பரமக்குடியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!



**பரமக்குடி, செப்.13 -**

**சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் 68ஆவது நினைவு தினத்தையொட்டி, அவரது நினைவிடத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2025) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் 68ஆவது நினைவு தினத்தையொட்டி, அவரது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

நம்முடைய சுதந்திர போராட்ட தியாகி, இந்தியாவிற்காக இராணுவத்தில் பாடுபட்டவர். சமூக நீதி போராளி. மறைந்த ஐயா இமானுவேல் சேகரனார் அவர்களுடைய 68வது நினைவு நாளையொட்டி முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு அரசின் சார்பாக நானும், கழகத்தினுடைய மூத்த அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், கழக நிர்வாகிகளும் வந்து இங்கே எங்களுடைய மரியாதையை நாங்கள் செலுத்தியுள்ளோம்.

அவருடைய புகழ் என்றென்னும் ஓங்கி நிற்கட்டும். சமூக நீதிக்காக அரும்பாடு பட்டவர். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபட்டவர் இமானுவேல் சேகரனார் அவர்கள். அவருடைய குடும்பத்தினர் அவருக்கு மணிமண்டபம் கட்ட வேண்டும், சிலை வைக்க வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை வைத்திருந்தார்கள்.

சென்ற வருடமே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கான உத்தரவை யிட்டார்கள். உடனடியாக 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள்.

பரமக்குடி நகராட்சி பகுதியில் அவருக்கு நினைவு மண்டபம் கட்டும் பணி கிட்டத்தட்ட 95 சதவீதம் நிறைவு பெற்ற நிலையில் நடைபெற்று வருகின்றது.

மணிமண்டபம் உள்ளே அவருடைய திருவுருவச் சிலை வைக்கின்ற இறுதிகட்டப் பணி நடைபெற்று வருகின்றது. இன்னும் 2 மாதங்களில் மணி மண்டபமும், சிலையும் திறக்கப்படும் என்ற செய்தியை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

சுதந்திர பேராட்ட தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் புகழ் ஓங்கட்டும். அடுத்து வருகின்ற தலைமுறையினருக்கும் அவருடைய சமூக நீதி பணி, அவருடைய பெருமைகள் கொண்டு சேர்க்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கேஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன், திருமதி தமிழரசி ரவிக்குமார், செ.சண்முகையா, மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜித் சிங் காலோன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சமூக நீதிப் பாதைக்கு வழிகாட்டும் ஒளியாகத் திகழும்

# தியாகி இமானுவேல் சேகரனார் நினைவைப் போற்றி வணங்குகிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



**சென்னை, செப். 13 -**

**தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் நினைவு நாளான நேற்று முன்தினம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம் - பரமக்குடியில் உள்ள இமானுவேல் சேகரனார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து வணங்கினார்.**

**அதனையடுத்து வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "சமூகநீதிப் பாதைக்கு வழிகாட்டும் ஒளியாகத் திகழும் தியாகி இமானுவேல் சேகரனாரின் நினைவைப் போற்றி வணங்குகிறோம்!" என்று குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

தீண்டாமை, இரட்டைக் குவளை முறை, சாதிய ஒடுக்குதல் போன்ற சமூகச் சழக்குகளுக்கு எதிராக வீரியமிகுந்த போராட்டங்களை முன்னெடுத்த சமத்துவப் போராளி தியாகி இமானுவேல் சேகரனாரின் நினைவு நாள்!

அவர் வாழ்ந்தது 32 ஆண்டுகளே... ஆனால் அவர் மறைந்தாலும் அவரது புகழ்ச்சுடர் அணையாமல் இன்றளவும் சமூகநீதிப் பாதைக்கு வழிகாட்டும் ஒளியாகத் திகழ்கிறது.

அத்தீரமிகு தியாகியின் நினைவைப் போற்றி வணங்குகிறோம்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மதியழகன் – சோ.துரைப்பாண்டியன் – ஆர்.குமரேசன் பங்கேற்பு!

# கோவை - இடையர்பாளையம் - 35வது வார்டில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம்!

## மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி தொடங்கி வைத்தார்! சம்பத் எம்.சி. நிகழ்ச்சி ஏற்பாடு!

கோவை, செப். 13 -

கோவை வடக்கு மாவட்டம், இடையர்பாளையம் பகுதி, 35 வது வார்டில் 'உங்களுடன் ஸ்டாலின்' முதல்வரின் முகவரித் துறை சார்பாக வீடுகள் தோறும் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டதில் பெருந்திரளான மக்கள் இடையர்பாளையம் சந்திப்பில், வி.ஆர்.ஜி. மஹாலில் அமர்ந்திருந்த அதிகாரிகளிடம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அளித்து ஒப்புகை சீட்டை அலுவலர் கையெழுத்துடன் முத்திரையுடன் பெற்று சென்றனர்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி தொடங்கி வைக்க, கோவை மாநகராட்சி ஆணையர் முன்னிலை வகிக்க 35 ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினர் சம்பத் ஏற்பாட்டில்,

இடையர் பாளையம் பகுதி கழக பொறுப்பாளர் மதியழகன், மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளரும் மாநகராட்சி கல்வி குழு தலைவரும் மாமன்ற உறுப்பினருமான திருமதி மாலதி, மாநகராட்சியின் மண்டலத் தலைவி மற்றும் 36 வார்டின் மாமன்ற உறுப்பினர் திருமதி தெய்வானை தமிழ்மறை, 35 வது வட்டக் கழகச் செயலாளர் ஆர். குமரேசன் மாமன்ற உறுப்பினர் சம்பத் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் தியாகராஜன், 35 ஆவது வட்டக் கழக அவைத் தலைவர் சோ.துரை பாண்டியன் முன்னாள் கவுன்சிலர் நாகராஜன் மற்றும் அனைத்து அணிகளின் கழக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் அனைத்து BLA 2 BLC, BDA மற்றும் பெருந்திரளான உடன்பிறப்புகள் கலந்து கொண்டு வந்திருந்த பொதுமக்களுக்கு பெரிதும் உதவினர்.

பெருவாரியான மகளிர் இந்த முகாமில் கலந்து கொண்டு விண்ணப்பங்களை பதிவு செய்தனர். அரசு அதிகாரிகள் ஊழியர்கள் மாநகராட்சி ஊழியர்கள் இதில் பங்கேற்றனர்.

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை, செப். 13 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், கனிம வளங்கள் மற்றும் கரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

நாளை ( 14 09.2025 - ஞாயிற்றுக்கிழமை ) மாலை 3 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) மஹாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிர மணியன் தலைமையிலும், பிற்படுத் தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் பெரியண்ணன் அரசு, முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

தொகுதி பார்வையாளர்கள் அறந்தாங்கி தொகுதி சுப.த திவாகரன், திருமயம் தொகுதி எஸ்.முத்துக்குமார், ஆலங்குடி தொகுதி எழில்மாறன் செல்வேந்திரன் ஆகியோர் பங்கேற்கிறார்கள். இந்நிகழ்வுகளில் ஒன்றிய , நகர ,பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச் சாவடி முகவர்கள் பி.எல்.ஏ 2 ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

செப்டம்பர் 17ந்தேதி கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழா,

வாக்குச்சாவடி முன்பு உறுதிமொழி ஏற்பு, கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி கோபி வடக்கு ஒன்றியம் பொம்மநாயக்கன் பாளையம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு 14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 5 திட, திரவ கழிவுகளை சேகரிக்கும் வாகனங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் வழங்கினார்.



கோவை வடக்கு மாவட்டம் இடையர்பாளையம் பகுதி 35 வது வார்டில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி தொடங்கி வைக்க, கோவை மாநகராட்சி ஆணையர் முன்னிலை வகிக்க 35 ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினர் சம்பத் ஏற்பாட்டில், இடையர் பாளையம் பகுதி கழக பொறுப்பாளர் மதியழகன், மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளரும் மாநகராட்சி கல்வி குழு தலைவரும் மாமன்ற உறுப்பினருமான மாலதி, மாநகராட்சியின் மண்டலத் தலைவி மற்றும் 36 வார்டின் மாமன்ற உறுப்பினர் தெய்வானை தமிழ்மறை, 35 வது வட்டக் கழகச் செயலாளர் ஆர்.குமரேசன் மாமன்ற உறுப்பினர் சம்பத் மாவட்ட வர்த்தக அணி தலைவர் தியாகராஜன், 35 வது வட்டக் கழக அவைத் தலைவர் சோ.துரைபாண்டியன், முன்னாள் கவுன்சிலர் நாகராஜன் மற்றும் அனைத்து அணிகளின் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.